
# ஓ, தேவனோடு தனித்திருக்கும் அந்த விலையேறப்பெற்ற மணிநேரங்கள்




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

*செய்தி:* **குருடனாகிய பர்த்திமேயு, மார்ச் 1, 1957, பத்தி எண் 9-10**

9. **உங்களை நீங்களே தனிமைப் படுத்திக் கொள்வதைக் குறித்து எதோ வொன்றுள்ளது என்று உங்களுக்குத் தெரியும்.** அநேக ஜனங்கள் தாங்கள் சபைக்கு வருவது மட்டும் ஒருக்காலும் ஜெபிப்பதில்லை. ஜெபம் பண்ணுவதற்கான ஒரே இடம் சபை மட்டும் தான் என்று அநேக ஜனங்கள் நினைக்கின்றனர், **ஆனால் புருஷர்கள் பரிசுத்த மான கைகளை உயர்த்தி, எல்லா இடங்க ளிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது.** நாம் நம்மையே தனிமைப்படுத்திக்கொள்ளும் போது, நாம் சபையில் ஜெபித்திருந்தால், நாம் எப்படி ஜெபித்திருப்போமோ அதைக் காட்டிலும், வழக்கமாக வித்தியாசமாக ஜெபிப்போம். இயேசு அதைக் குறித்து கூறியிருக்கிறாரே, அந்த அந்தரங்க ஜெபமாக அது இருக்கிறது, “**நீ ஒரு**

**இரகசிய அறைவீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி விடு, நீ அவ்வாறு செய்து, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்"** என்று அவர் கூறுகிறார்.

**அவ்விதமாக நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, எல்லா மாய்மாலத்தையும் அதிலிருந்து எடுத்துப் போடுகிற அந்த ஜெபத்தில் ஏதோவொன்று இருப்பதாகத் தோன்றுகிறது. அப்போது நாம் தனித்திருக் கும்படியாக, தேவனோடுள்ள ஒரு மேலான தொடர்பில் வந்துவிடுவது போன்று தோன்று கிறது.** எப்போதாவது இயேசுவோடு தனித் திருக்க வேண்டிய அநேக நேரங்கள் என் னுடைய ஜீவியத்தில் இருந்திருக்கின்றன, அநேகமாக உங்கள் ஜீவியத்திலும் அவ்வாறு இருந்திருக்கலாம். *அப்போது நான் என்னு டைய காரை எடுத்து, சாலையில் ஓட்டிக்*

*கொண்டு, அப்படியே கவனமாக பார்த் துக்கொண்டே வருவேன்.* **நெடுஞ்சாலை யில், பரபரப்பு நிறைந்ததாக இல்லாத இடத்திற்கு நான் வந்தபிறகு, அல்லது ஏதோவொரு நாட்டுப்புற சாலையை விட்டு வெளியில் வந்தடைந்த பிறகு, அவரு டைய இரக்கங்களாலும் நன்மைகளாலும் மிகவுமாய் நிறையப்படும் அளவுக்கு, நான் அப்படியே காரை நிறுத்தி, கார் சக்கரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்து** **(held)**, **ஒரு குழந்தையைப் போல அழுவேன்** till.

10. அதுதான் தனிமையாக இருப்பது... **அநேக நேரங்களில் நான் மலைகளின் மேலே ஏறிச் செல்கிறேன்.** அங்கே (என்னோடு கூட) இருக்கும் ஒவ்வொரு மனிதனும், நான் வேட்டைக்குப் போய் கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொள் கிறான். **நானோ அங்கே மேலே சென்று, ஒரு பாறையின் மேல் அமர்ந்து, என்னுடைய முழு உள்ளார்ந்த ஜீவனும், உங்களால் உணர்ந்து கொள்ளக் கூடிய, ஏதோவொன்றினால் நிறை**

**யப்படுவது போல தோன்றும் மட்டுமாக, நான் மேலே ஆகாயத்தையே பார்த்துக் கொண் டிருப்பேன்...** ஓ, அப்போது, உலகத்திலுள்ள எல்லாமே ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக தோன்றும். **ஓ, தேவனோடு தனித்திருக்கும் அந்த விலையேறப்பெற்ற மணிநேரங்கள்.**

**மிகவும் மகத்தான வெளிப்பாடும், உள்ளுணக்கமும் வரும் நேரம், அங்கே இருக்கும் போதுதான், அது நாம் தேவ னோடு தனிமையாக இருக்கும் போது தான்.** நாம் அதன்பேரில் இன்னும் அதிக நேரம் எடுத்துக்கொண்டிருக்கலாம், அப்போது நாம் கிறிஸ்துவுக்குள் சிறந்த ஒரு ஜீவியத் தையும், இன்னும் அதிக வெற்றிசிறந்த ஜீவி யத்தையும் ஜீவித்திருப்போம் என்பதில் நான் நிச்சயமுடையவனாயிருக்கிறேன்.

★★★★★